நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் - 14.09.1901

# செந்தமிழ்

பகுதி: 9


தொகுதி: 112

திருவள்ளுவர் ஆண்டு 2049

திங்கள் இதழ்

விலை: ரூ.20

செப்டம்பர் - 2018




நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

# தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி** | தலைவர் |
| மருத்துவர் **ந.சேதுராமன்** | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | செயலாளர் |
| **திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | உறுப்பினர் |
| முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்** | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | உறுப்பினர் |
| திரு. **துரை கருணாநிதி** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |

# செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | தலைவர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | செயலாளர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **து.மாயராசன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **சு.சிவசாமி** | உறுப்பினர் |
| பொறிஞர் **லெ.சிவக்குமார்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி** | உறுப்பினர் |
| திரு. **ஜெ.பாலதண்டாயுதம்** | உறுப்பினர் |
| முனைவர். **க.சந்திரசேகரன்** பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | **இதழ் மணம்** | 4 |
| 2. | **சிலப்பதிகாரப் புதையல்கள் - கவுந்தியடிகள்**<br>- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**<br>சென்ற இதழின் தொடர்ச்சி | 8 |
| 3. | **இறந்தகாலம் - ஒரு புதிய பார்வை**<br>- பேராசிரியர் **இரா.கோதண்டராமன்**<br>சென்ற இதழின் தொடர்ச்சி | 15 |
| 4. | **தொல்காப்பியம் கூறும் கவிதை மொழி**<br>- பேராசிரியர் **ப.மருதநாயகம்**<br>சென்ற இதழின் தொடர்ச்சி | 24 |
| 5. | **சைவசித்தாந்தமும் திருமந்திரமும்**<br>- முனைவர் **உ.கருப்பத்தேவன்** | 32 |
| 6. | **சங்கச் செய்திகள்** | 39 |



*வலைத்தளம்*

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

*மின்னஞ்சல்*

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in


| **இதழ்க்கட்டணம்** | **உள்நாடு** | **வெளிநாடு** |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 3,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 20 | |

## இதழ் மணம்

"தொண்டலால் துணையுமில்லை" ஐயன் ஐயறனார்க்கே கவுந்திஅடிகள் படைப்பும் மறையவன் படைப்பும் சமயம் சார்ந்த சடங்கு, நம்பிக்கையை அடியொற்றிச் செல்கின்றன. ஆசிரியர் இளங்குமரனார் கவுந்தியடிகள் பாத்திரத்தின் மன இயல்பு குறித்த பாத்திரப்படைப்பின் உள்ளீட்டை விளக்கும் நிலையில் மாந்தர் மனநிலை குறித்த விரிவான செய்திகளைச் சிந்திக்க வைக்கிறார். தீவினையின் விளைவைப் பெரியோர் வலியுறுத்தினும் உறுதியற்றோர் அதனைக் கொள்ளார்; தீவினை சுடும்போது செயலற்று நிற்கின்றனர். மன ஒழுக்கத்தின் உறுதிப்பாட்டை ஆசிரியர் வற்புறுத்தும் போது, கவுந்தியடிகள் நெறியின் நீங்கிய சிற்றினத்தாரைச் சாவிக்கும் செய்தியை எடுத்துரைத்து "சினம் ஏன்?" என வினவும் செய்தியும் சிந்திகற்பாலது. பலவகையான ஒழுக்கக்கேட்டிற்கு சினமும் வம்பப்பரத்தர்தம் கீழ்மொழியும் காரணமாகலாம். ஆனால் சான்றோர் அவற்றைத் தவிற்காதது ஏன்? இதுபோன்ற சிக்கலான கேள்விகளை எழுப்பிப் படிப்பவரைச் சிந்திக்க வைக்கிறார்; பள்ளிகளில் அன்பைப் போதிக்கும் ஆசிரியர் மாணவர்களை அடிக்கலாமா? வசைமொழி கூறிப் புண்படுத்தலாமா? நீங்கா வடுவை ஏற்படுத்தலாமா? வாழ்க்கை சார்ந்த படிப்பினைகளைப் பாத்திரத்தின் வாயிலாக நம்மைச் சிந்திக்க வைக்கிறார். சமயமும் வாழ்க்கையும் நடைமுறை சார்ந்ததாக அமைதல் வேண்டும். சடங்கும் நம்பிக்கையும் சார்ந்த பழைமை பற்றிய பாரம்பரியத்தின் மீட்க முடியாத தாக்கமாக இருக்கக்கூடாது. மனிதநேயம் சமயவாதிகள் அடித்தளத்தை ஆட்டம் காண வைக்கிறது. பேராசான் இளங்குமரனாரின் கவுந்தியடிகள் பற்றிய கேள்விகள் எல்லோருக்கும் பொது. திருவிகவும் அப்பரும் தொண்டு என்பது மாந்தநேயம் எனப்பேசியதை நினைவுறுத்துகிறார். பாதை தவறிப் பயணம் செய்பவர்கள் இலக்கை அடையமுடியாது என்பதை உணர்ந்தால் திருந்தலாம்.

சென்ற இதழில் "கால உணர்ச்சி பற்றி விளக்கம்" தேவைப் படுகிறது என்று எழுதினேன். அதற்கு அறிஞர் இரா.இளங்குமரனார் அளித்துள்ள விளக்கம் இந்த இதழில் வெளிவருகிறது. அவருடைய கடிதம் ஆவணக் காப்பகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டியவை.

உலகம் இன்னாதது; இனிய காண்பதற்குரிய சூழல் கூறல் உழையிருந்தான் கடன் என்பதும், எதிராக் காக்கும் அறிவு என்பது வாழ்க்கையில் எப்போதும் எதுவும் நேரலாமாகையால் அதற்குரிய வாழ்க்கை நடைமுறை அறிவு இன்றியமையாதது என்பதால் உரையாசிரியர் அவர்க்குக் கால உணர்ச்சி இல்லாமை சுட்டினார் என்னும் விளக்கம் கொள்க.

**"தொல்காப்பியம் கூறும் கவிதை மொழி"**

பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்கள் தமிழ்க்கவிதை வரலாறு பல ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதையும் இசுரேல் நாட்டுப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பழைய ஏற்பாட்டை மேற்கோள் காட்டி அந்நூலுள் தமிழ் இலக்கிய மரபின் ஆழமான தாக்கம் இருப்பதை தக்க சான்றுகளுடன் காட்டியுள்ளார். தமிழ் மரபின் தொன்மையையும் தமிழ்ப்பண்பாடு, நாகரிகம், வாணிகம் ஆகியவற்றின் வீச்சு நடுக்கடற்பகுதி சார்ந்த நாடுகளில் பரவலாக அறிந்திருந்தமையால் அந்நாட்டு மொழிக்கவிதைகளில் தமிழ்க்கவிதை மரபு பின்பற்றப்பட்டு வந்துள்ளதை ஆசிரியர் அரிதின் முயன்று பல்வேறு மேற்கோள்களை எடுத்துரைப்பது கற்று இன்புறத்தக்கது. தொல்காப்பியம் அகச்சான்றாக இருந்து கவிதை மொழிக்கு எழுத்து, சொல், பொருள் என்னும் முப்பகுதியிலும் கவிதை பற்றிப் பேசி இருப்பதையும் ஆசிரியர் எடுத்துரைக்கும் திறம் கற்பவர்க்கு வியப்பு அளிக்கும். வாசகர்கள் கட்டுரையின் மாண்பும் நுட்பமும் அறிந்து கற்றுத்திறம் பெறுக. இடைச்சொல், உரிச்சொல் பட்டியல் தந்து கவிதைமொழியைத் தொல்காப்பியர் வளப்படுத்தியுள்ளதையும் வளரும் தமிழ்மொழிக்கு இடைச்சொல், உரிச்சொல் தொடரும் என்பதையும் நினைவுறுத்துகின்றார்.

**"சைவசித்தாந்தமும் திருமந்திரமும்"** பேராசிரியர் உ.கருப்பத்தேவன் சைவ சித்தாந்தமும் திருமந்திரமும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைந்துள்ளார். கட்டுரை சைவ சித்தாந்தத்தின் முழுமையான செய்திகளை கற்பவர் மனம் கொள்ளும் வகையில் எளிமைப்படுத்தி சுருக்கமாக விளக்கம் அளிக்கிறது.

கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருள் ஆட்சி வாழ்க்கை; வாழ்க்கை ஒன்றியியங்க இம் முப்பொருள் குறித்த அறிவு வேண்டும்; அதனை சைவ சித்தாந்தம் பல்வேறு வகைகளில் எடுத்துரைக்கிறது. ஆசிரியர் சைவசித்தாந்தப் பார்வையில் நம் முன்னோர்கள் பற்பல காலங்களில் சிந்தித்தவற்றை நிரல்படக் கோத்தளித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மாணவர் சைவ சித்தாந்தத்தை அறிவதற்கு இக்கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சாத்திர நூல்களையும் தோத்திர நூல்களையும் மேற்கோள் காட்டி பல்வேறு சமயச் செய்திகளை தொகுத்து அளித்துள்ள ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கதாகும். பேராசிரியரின் கட்டுரை அடுத்த இதழிலும் தொடரும்.

பேராசிரியர் இரா.கோதண்டராமன் மொழிநூல் கட்டுரை தொகுப்பு மாணவர்கள் தொகுத்து வைத்து அரிதின் முயன்று கற்றற்குரியதாகும். ஆசிரியர்கள் வகுப்பறைகளில் கல்வி சார்ந்த செந்தமிழ்க்கட்டுரைகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வது மாணவர்களுடைய வருங்காலத்திற்குப் பெரிதும் பயனுடையதாகும். கல்வி என்பது வாழ்நாள் முயற்சி; இடைவிடாத தேடல், கற்றல் இன்றியமையாதது. அதனால் ஆசிரியர் திருவள்ளுவர்,

"என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு" என்றும்

"அறிதோறும் அறியாமை கண்டற்றால்" என்றும் கல்வி என்பது ஒரு தொடர் பொருள் என வலியுறுத்துகின்றார்.

*"கண்ணில்வரு நோயைக் கடியப் பொருளுதவி*
*பண்ணிப் பரிந்துநமைப் பாவித்த - புண்ணியனைச்*
*சீராச ராசேந்தரச் செம்மலை நன்னெஞ்சே*
*பாராட்டிப் பைந்தமிழிற் பாடு."*

**"செந்தமிழ்"**

மேதகு ஆசிரியர் அவர்கள்,
செந்தமிழ் மாதிகை,
54, தமிழ்ச்சங்கச்சாலை,
மதுரை -1.

மேதகு ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். வாழிய நலனே.

“கால உணர்ச்சி பற்றி விளக்கம் தேவைப்படுகிறது” என்னும் தங்கள் அரிய குறிப்புக்கு நன்றி.

**கவுந்தியடிகள் அறிவன்** (அருகன்) **அடியார்; முதியர். அவர்க்குக் கால உணர்ச்சி வேண்டும்.** அது,

*“கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள*
*நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்’*
- **புரிபவர்** *(1099) (1100)*

என்பது தொல்காப்பியம். மேலும்,

*“மறுவில் செய்தி மூவகைக் காலமும்*
*“நெறியின் ஆற்றிய அறிவன் தேயம்”* *(1021)*

என்பதுமாம். வள்ளுவமோ,

*“வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்”*
*“எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை*
*அதிர வருவதோர் நோய்”*

என்பவையாம்.

கவுந்திக்குக் கால உணர்ச்சி இருப்பின், புறஞ்சேரியில் இருந்து ஊர்காண விடுத்திரார். தீக்கனாக் கண்டதுரைத்ததன் பின்னரும் ஆயர்பாடிக்கு விடுத்திறார்; ஆதலால், தொல்பழ உரையர் அவர்க்குக் கால உணர்ச்சி இல்லாமை சுட்டினர்”

7 இராமன் தெரு,
திருநகர், மதுரை - 6
625006

இன்பஅன்புடன்,
இரா.இளங்குமரன்
29.08.2018

# சிலப்பதிகாரப் புதையல்கள்

## 14 கவுந்தியடிகள்

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

**சென்ற இதழின் தொடர்ச்சி**

ஓர் ஊரில் தங்கி இரவு கடந்த காலையில் புறப்பட்டனர்; வெயிற்போதும் நடந்தனர். நீர்வேட்கை உண்டாயது. கோவலன் ஒரு கிளை வழியில் சென்று பொய்கை ஒன்றை அடைந்தான்.

அங்கே ஒரு தெய்வம் மாதவியின் தோழி வயந்தமாலை போல் தோன்றி வாழ்க்கையில் வெறுப்புற்ற மாதவி என்னை விலக்கிவிட்டாள். யான் வணிகக் கூட்டத்தொடு வந்தேன். எனக்கு யாது சொல்கிறாய் என, கோவலன் ஐயுற்று மந்திரமொழி ஒன்று கூற, அவள் அஞ்சித் தன் உருவம் காட்டி, கண்ணகிக்கும் கவுந்தியடிகட்கும் இதனைக் கூறுதல் வேண்டா என்று கேட்டுப் பிரிந்தது. கோவலன் கொண்டு வந்த பொய்கை நீரைப் பருகி வேட்கை தீர்ந்தனர்; வெயில் மிகுதலால் மேலும் நடவாராய் ஓர் ஐயை கோட்டம் அடைந்து தங்கினர். உடன்பிறந்தவர் ஒருங்குடன் இருப்பது உண்டோ உறுதவத்தீர் என்றவுடன் பொங்கிய சீற்றம் கூறியவரைச் சாவிக்கிறது! சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லியை உறுதவத்தவர் கொள்ளலாமா? கொண்டு சாவித்தல், அவர்கள் தீவினையினும் பெரிய தீவினை செய்தாராவர் அல்லரோ! தவந்தருசாபம் அது, ஆதலால் அத்தவம் குற்றப்பாடு உடையது ஆகின்றதே!

பழிப்புக்கு ஆட்பட்ட கோவல கண்ணகியர் 'நெறியின் நீங்கியோர் நீரல கூறுதலை அறியாமை என்று அறியல் வேண்டும்' என்று அல்லவோ அருந்தவ வடிவர்க்கு அறிவுரை கூறத்துணிகின்றனர். சாவநீக்கமும் அவர்கள் அல்லரோ வேண்டுகின்றனர்.

கோவல கண்ணகியரை எள்ளியது தம்மை எள்ளியதனினும் மேலாக எண்ணி வருந்திய வருத்தம் தானே சாவிப்பு ஆகியது! தவ இழப்பையும் தாங்கும் துணிவை அவர்க்குத் தந்தது. வினைக்கொள்கை அழுத்தத்தினர் 'பழித்தலும் பழிக்கக் கேட்டலும்' வினைவழிப்பட்டது என்றல்லவோ அமையவேண்டும். அன்றியும் அவர்கள் நெறியர் அல்லரே! நெறியின் நீங்கினோரை நெறிகாட்டுவோர் இந்நிலைப்படுத்தல் நேரிதா?

**கவுந்தியடிகள் உள்ளக் காய்வு கண்ணகிகோவலர் தொடர்பால் கனியத் தொடங்கிவிட்ட கவின் இஃதாம்!**

ஐயை கோட்டத்தின் ஒருபால் 'சாலினி' தெய்வமருள் ஏறி ஆடுகிறாள். அவள் ஒருபுறத்தே இருந்த கண்ணகியைக் கண்டு எயினர்க்குக் காட்டி,

"இவளோ,
*கொங்கச் செல்வி குடமலை யாட்டி*
*தென்தமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து*
*ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய*
*திருமாமணி* என"க் கூறுகிறாள்.

இனி வெயில்மிக்கிருத்தலால் பகல்நடை வேண்டா; இரவுச் செலவு நலமாம் எனக் கோவலன் கூற, கவுந்தியடிகளும் இசைந்து நிலவு ஒளியில் வழிச் செலவு மேற்கொள்கின்றனர்.

கூகைகள் குழறின; புலிகள் குழுமின; அஞ்சுதல் வேண்டா என்று கூறி,

"*தொடிவளைச் செங்கை தோளிற் காட்டி*
*மறவுரை நீத்த மாசறு கேள்வி*
*அறவுரை கேட்டாங்கு ஆரிடை கழிந்து,*"

நடந்தனர்.

"*மதுரைத் தென்றல் வந்தது காணீர்*
*நனிசேய்த் தன்றவன் திருமலி மூதூர்*"

என்பது சொல்லக்கேட்டு,

*வையை என்னும் பொய்யாக் குலக்கொடி*
*புனல்யா றன்று பூம்புனல் யாறென...*
*மாதவத் தாட்டியொடு மரப்புணை போகி*
*அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்*
*புறஞ்சிறை மூதூர் புக்கனர்*"

புறஞ்சிறை மூதூர் என்றது புறஞ்சேரி; அது துறவோர் இருக்கையாம்.

தம்மொடு வந்தாள், தெய்வமேறப் பெற்ற சாலினி வாக்கால் தவக்கொழுந்து எனப் பாராட்டப்படுகிறாள்! கொங்கு - குடமலை - மட்டுமன்று. உலகுக்கு ஓங்கிய திருமாமணி எனப்படுகிறாள்! தவ மூதாட்டியுள்ளம் நெகிழ்ந்து போகின்றது! உள்ளம் சுழல்கின்றது! மெய்யியல் தத்துவங்கள் கழல்கின்றன! இறுக்கம் இளக்கமாகின்றது! உருக்கு, உருகுபனி ஆகின்றது!

"*காலை முரசம் கனைகுரல் இயம்பக்*
*கோவலன் சென்று கொள்கையின் இருந்த*
*காவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி*"னான்.

***"என்னோ இங்ஙன் கடைகழிந்த வாறு"***
என்று கவுந்தியடிகள் கேட்ட வினாவுக்கு, "உரையாட்டில்லை" என்றவன் தான் உரையாடுகின்றான் மேலே!

"நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து ஆரிடை யுழந்து
சிறுமை யுற்றேன் செய்தவத்தீர் யான்
தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு
என்நிலை உணர்த்தி யான்வரும் காறும்
**பாதக் காப்பினள் பைந்தொடி யாகலின்**
**ஏதம் உண்டோ அடிகள் ஈங்கு?"**

என்கிறான்.

'எற்றென்று இரங்குவ செய்'தானாக நைந்து தேம்பி, நும்மையன்றி எமக்கு எவருளார்? நும் பாதக் காப்பினள் பைந்தொடி என்றானுக்குக் கவுந்தி கூறுகிறார்:

முற்பிறப்பில் நல்வினையை மிகச்செய்து சிறிது தீவினையும் செய்த தாலே உன் உறவையும் உடைமையையும் இழந்து நின் மனைவியொடும் துயருற்றவனே,

எந்த உயிர்க்கும் எவரும் பாவம் செய்தலின் நின்றும் நீங்குமின்; நீங்கீர் எனின், அதன் விளைவாகிய துயரைத் தீவினையூட்டும் என்று அறங்களைப் பெரியோர் எவ்வளவு வற்புறுத்திச் சொன்னாலும் **உறுதியற்றோர்** அதனைக் கொள்ளாராய்த் தீவினை யூட்டுங்கால் செயலற்று நிற்கின்றனர். கற்கவேண்டுவ கற்றோர் அவற்றின் பயனை நுகருங்கால் அதற்கு வருந்தார்; இது நாம் செய்ய வந்ததே என்று கொள்ளுவர்.

மகளிரைப் புணர்தலால் வரும் துன்பமும், பின்னர்ப் பிரிதலால் வரும் துன்பமும், பொருள் தேடுதற் பொருட்டு வரும் துன்பமும், அப்பொருள் அகல்தலால் வரும் துன்பமும் என முழுவதும் துன்பமேயாம். இத்துன்பங்கள் பற்றற்ற தனிவாழ்க்கையயுடைய பெரியோரிடத்து இல்லை. புணர்தல் பொருள் என்பவை காரணமாகத் துன்பம் எய்தினோர் இன்று நின் அளவினோர் அல்லர். முன்னும் எண்ணிறந்தோர்.

தன்தந்தை ஏவலால் மனைவியொடு காடு சென்று அவளைப் பிரிந்து அல்லல் பட்டவன் **இராமன்** என்பதை நீ அறியாயோ?

மண்ணையும் அரசையும் இழந்து மனைவியொடு சென்ற **நளன்** காட்டிலே நள்ளிருளிலே அவனே பிரிய நேர்ந்தது நீ அறியாயோ?

அவரைப் போல் நீயும் துயருற்றனை எனினும் அவரினும் நீ பெரிய நன்மையை உடையாய்; அஃது யாது என்றால், நீ உன் காதலி உன்னைப் பிரியாது வாழும் வாழ்வைப் பெற்றாய் என்று தேற்றி நகர்க்குச் சென்று வருவாயாக என விடுத்தார்.

வினைக் கொள்கையில் அழுந்தி நின்று அறவுரை கூறத் தொடங்கிய அவர், நின்னினும் குறையா நிலையர் பட்ட துயர்களை அறிவாய் அல்லவோ! அவர் பெறாப்பேறும் நீ பெற்றுளை அலவோ! என ஒரு பால் அடிகளாகவும், மற்றொருபால் அன்னையராகவும் - ஐயையாம் பாட்டியராகவும் - விளங்குகிறார்.

மதுரை அகநகர் கண்டுவந்த கோவலன் புறஞ்சேரி அடைந்தான். இரவு கழிந்து தான் கண்டு வந்த காட்சியைக் கோவலன் கவுந்தியடிகளுக்குக் கூறினான். அப்பொழுது மாடலமறையோன் கவுந்தியடிகள் இருக்குமிடத்து வர, அவனைக் கோவலன் வணங்கினான். கோவலன் முன்னர்ச்செய்த அறச்செயல்களையெல்லாம் அடுக்கிக் கூறி,

***"இம்மைச் செய்தன யானறி நல்வினை***
***உம்மைப் பயன்கொலோ ஒரு தனி உழந்தித்***
***திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"***

என்றான். அப்பொழுது கோவலன்,

ஒரு கீழ் மகனால் இந்நகரில் கண்ணகி நடுங்கவும் யான் என் உடை கொள்ளப்படவும் கடாவின் மேல் ஏறவும் கண்ணகியொடு துறவர் பெறும் பேற்றைப் பெறவும், போதி அறவோனிடம் மணிமேகலையை மாதவி அளிப்பவும் வைகறை யாமத்தே கனவு கண்டேன் ஆதலால் அது நன்றன்று; உடன் வந்துறும் என்றான்.

அதனைக் கேட்ட அளவில் துறவோர்க்கு அல்லது இப்புறஞ்சேரி பிறவோர்க்குப் பொருந்தாது. ஆதலால் நின்னை வணிகர் ஏற்றுக்கொள்வார். இவ்விடத்தில் உன் இருப்பை விட்டு நீங்கு; கதிர் செல்வதன் முன் உன் காதலியொடு மதுரை மாநகர் புகுக என்று கவுந்தியடிகளும் மாடலனும் கூறினர்.

நகருள் சென்ற கோவலன் வணிகர் எவரையும் கண்டு தன்னை அடையாளப்படுத்தினான் அல்லன். ஆங்குச் சென்று தங்கும் இடம் என எதனையும் தேர்ந்தான் அல்லன். பூம்புகார் தொட்டு மாமதுரை வந்த

கவுந்தியடிகளும், கோவலன் அறவன் என்பதை அறிந்த மாடலனும் ஒருங்கே ஒடு மதுரைக்குள் என்கின்றனர்! கனவுச் செய்தியின் விளைவா? மாந்த நேயத்தை மறக்கச் செய்யும் கொடுமைக்கு அது தள்ளிவிட்டதே எனத்தோன்றும்!

தற்செயலாக அவண் வருகிறார் ஆயர் முதுமகள் **மாதரி** என்பவர். புத்தர் பெருமான் முன் நின்ற சுசாதையார் போல, அவரை முன்னரே அறிந்தவர் அல்லர், கவுந்தியார். ஆயினும்,

***"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்***
***கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடு இல்லை***
***தீதிலள் முதுமகள் செவ்வியள் அளியள்"***

இவளிடம் கண்ணகியை ஒப்படைப்பது துன்பமற்றது என எண்ணினார். மாதரி கேட்பாயாக! இக்கண்ணகியின் கணவன் கோவலன். அவன் தந்தை மாசாத்துவான். அவன் பெயரைக் கேட்ட அளவில் அரிய பொருளைப் பெற்றதுபோல் மகிழ்ந்து இவர்களைத் தம் விருந்தினராகப் பெருஞ்செல்வர்கள் கொள்வர். அதுவரை

***"இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்"***

என்றார். அவரைப்பேணும் முறையையும் பேணலால் உண்டாம் பயனையும்,

"மங்கல மடந்தையை நன்னீர் ஆட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
**ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்**
**தாயும் நீயே ஆகித் தாங்கு;** ஈங்கு
என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு
நடுங்கு துயர் எய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக்கடம்பூண்ட **இத்தெய்வ மல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"**

என்று கூறினார். பத்தினிப் பெண்டிரால் நாடுபெறும் நலமும், தவத்தவர் தரும் அடைக்கலம் மிகச்சிறிதே எனினும் மிகப்பேரின்பம் நல்கும்

என்பதும் விரித்துக் கூறிச் சான்றும் காட்டினார். மேலும், இங்கே நீட்டித்து இராமல் நீ போ' என்று விடுத்தார். மகிழ்வொடு மாதரி அழைத்துச் சென்று தம்மனைக் கண் புகுந்தார்.

கண்ணகியையும் கோவலனையும் கனவுக்காட்சியைக் கூறிய அளவில் மாடலன் கூறினாலும், கவுந்தியடிகள் ஏற்கலாமா? உடனே போ எனக் கூறலாமா?

மாதரி வாராக்காலும் விடுத்திருக்கத் தானே செய்வர்? ஏனெனில், அவரைக் காணுமுன்னரே போ என்றனரே! பொழுதும் சாய்ந்து இரவு வருவது ஆயிற்றே! இரக்கமிக்க அல்லது இரக்கமுடைய செயலா?

கண்ணகியாரை, கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால் என்கிறாரே! அருகதேவன் திருப்பெயர்களைக் கூறுவது அன்றிப் பிறபெயர் கூறாது என் நா என்றவர் அல்லரோ அவர்! ஏன் விரைவுபட்டு புதுவராம் அவர்கள் நிலையை எண்ணாமல் விடுக்கிறார்?

*“அறத்துறை மாக்கட் கல்லது இந்தப்*
*புறச்சிறை இருக்கை பொருந்தாது”*

என்பது அவர் உள்ளத்தை அலைக்கழிக்கிறது. கோவலன் ஊர்காணப் புறப்படுமுன்,

**“பாதக் காப்பினள் பைந்தொடி யாகலின்**
**ஏதம் உண்டோ அடிகள் ஈங்கு?** (இல்லை)”

என்று கூறினானே! இருக்கக்கூடா இடத்து இருக்கச் செய்து, காவற் கடமை பூண்ட யானே, கவலைக்கிடமாகச் செய்துவிடின் அம்மவோ தாங்கேன்; கூடாது! என விரைவு;ப் படுத்துகிறார்!

அவரோ தவப்பள்ளியர்; கோட்டம் பள்ளி என்பன அன்றிப் புகாத உறுதியர்! உடனாகிப் போகவோ, அவர் நிலை இடம் தரவில்லை. அன்றி அவர் மதுரை வழியையே அறியாது, அறிந்தார் உரை கேட்டு வந்தவர்; துறவுத்தூயர்! என் செய்வார்?

பருந்து வட்டமிட்டு வருவதாக நினைத்து ஒலி எழுப்பிக் குஞ்சைக் கூட்டுக்குள் அல்லது வீட்டுக்குள் செல்லவிடும் தாய்க்கோழி அன்ன தகவில் உரைக்கிறார்! **கோவல கண்ணகியர், அவரைத் துறவு நிலை - சமயக்கட்டு - என்பவை எல்லாம் கடந்த கனிவராக்கிவிட்டனர்.**

பதினாறாம் காதையில்

*“மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி*
*ஏதம் இல்லா இடம் தலைப் படுத்தினாள்”*

எனக் கூறப்படுகிறார்.

ஏதம் ஏற்பட்டதை உணர்ந்து, உள்ளகம் ஒடுங்கி, உண்ணா நோன்பு கொண்டு, உயிர்க் கொடை புரிகிறார்!

மாடலன் கழுவாய் தேடி நீராடித் தீர்த்தது போலத் தீர்த்துக் கொண்டாரா? ஐயந்தீர் காட்சியராக அல்லவோ நிறைவுறுகிறார்.

*"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்*
*வானம் நணிய துடைத்து"*

என்பதை நிலைநாட்டப் படைக்கப்பட்டார் போலும்.

"தெய்வமாய்,
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து" (கட்டுரை காதை)

என்றதுபோல் **கவுந்தியாரும் விண்ணக விருந்தாகினார் போலும்!**
"பற்றறலே வீடு பேறு; அது பேராப் பெருநிலை" என்பது சமயநூற் கொள்கை. கவுந்தியடிகள், தம்நலப்பற்று அற்றார் எனினும் அருகன் அடிகளே பற்றாகப் பற்றினார் எனினும் கண்ணகியார் மேல் ஏற்பட்ட தெய்வ நிலைப்பற்று, பாதக்காப்பினள் என்பதை மாதரிமேல் சுமத்தினும் தம் மேல் சுமத்தப்பட்ட பற்று, பாதுகாப்பைக் காக்கவியலா அவலக்கவலை, அதனால் உண்ணா நோன்பால் உயிர்நீத்த உரன் என்பவற்றால் அவர் தொண்டில் - தம்நலமற்ற தொண்டில் தோய்ந்தாரே அன்றி, "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பதை இழந்தவரே ஆவர். அதனை, அவரே விரும்பி ஏற்றவரும் ஆவர்.

"வீடும் வேண்டா விறல்" நிலை உற்றவர், **மன்னுயிர் ஓம்பும் கடமையில் குன்றார்! தன்னுயிர் ஓம்பும் பற்றற்ற நிலையைக் கருதார். பற்றுற்ற நிலையில் மன்னுயிர் ஓம்பும் தொண்டிலே நிலைபேறமைவதே பிறவி நோக்காகக் கொள்வர்.**

"எனக்கு வீடு வேண்டா! பிறவாமை வேண்டா
எனக்குத் தொண்டு வேண்டும்! தொண்டுக்காகப் பிறப்பு வேண்டும்!
தொண்டிலா வீடு வேண்டா! வேண்டா!"

என்ற **திரு.வி.க.வின் முன்னோடி கவுந்தியடிகள் எனல் சாலும்!**

"தொண்டலால் துணையும் இல்லை" என்னும் பெற்றியைக் கண்ணகியார் தொடர்பால் பெற்று, **வீடும் வேண்டா விறலில் விளங்கியவர் கவுந்தியடிகள் எனப் போற்றுவோம்!**

# இறந்தகாலம் - ஒரு புதிய பார்வை

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்,
19, தொல்காப்பியர் தெரு, அசோக்நகர்,
புதுச்சேரி - 605008
கைபேசி: 9443151044

**சென்ற இதழின் தொடர்ச்சி**

44.0 வினைப்பகுதி : கற (<*கறய்); இறந்தகாலப்பகுதி: கறந்த்

(1) *கறயின்றஉ > கறயின்று (இன்றஉ > இன்று)

(2) கறயின்று > கறயிந்து (இன்று > இந்து)

(3) கறயிந்து > கறய்ந்து (இ> ϕ /ய்-ந்த்)

(4) கறய்ந்த்(உ) > கறந்த் (கரந்து) (ய்> ϕ /-ந்த்)

45.0 வினைப்பகுதி: மேய்; இறந்தகாலப்பகுதி: மேஞ்ச் (mēñj)

(1) *மேயின்றஉ > மேயின்று (இன்றஉ > இன்று)

(2) மேயின்று > மேயிந்து (இன்று > இந்து)

(3) மேயிந்து > மேய்ந்து (தமிழ்) (இ > ϕ /ய்-ந்த்)

(4) மேய்ந்து > மேய்ஞ்ச் (உ) (ந்த் > ஞ்ச்/ய்-)

(5) மேய்ஞ்ச் > மேஞ்ச் (ய் > ϕ /-ஞ்ச்)

46.0 வினைப்பகுதி: கொதி; இறந்தகாலப்பகுதி: கொதிச்

(1) *கொதியின்றஉ > கொதியிற்று (இன்றஉ > இற்று)

(2) கொதியிற்று > கொதியித்து (இற்று > இத்து)

(3) கொதியித்து > கொதிய்த்து (இ > ϕ /ய்-த்த்)

(4) கொதிய்த்து > கொதித்து (தமிழ்) (ய் > ϕ /-த்த்)

(5) கொதிய்த்து > கொதிய்ச்சு (த்த் > ச்ச் / ய்-)

(6) கொதிய்ச்சு > கொதிச்சு (பேச்சுத்தமிழ்) (ய் > ϕ /-ச்ச்)

(7) கொதிச்ச்(உ) > கொதிச் (கொடகு) (-ச்ச்>ச்)

47.0 வினைப்பகுதி: கள் 'களவாடு'; இறந்தகாலப்பகுதி: கட் களவாடி

(1) *களின்ற்உ > களிற்று (இன்ற்உ > இற்று)

(2) களிற்று > களித்து (இற்று > இத்து)

(3) களித்து > கள்த்து (இ > ϕ / -த்த்)

(4) கள்த்து > கள்ட்டு (த்த் > ட்ட் / ள்-)

(5) கள்ட்டு > கட்ட்டு (ள்>ட்/-ட்ட்)

(6) கட்ட்டு > கட்டு (பழந்தமிழ்) (ட் > ϕ / -ட்-ட்)

(7) கட்ட்(உ) > கட் 'களவாடி' (ட்ட் > ட்)

3.5 தெலுங்கு: இந்த மொழியில் **-இத்-** என்பதும் ஓர் இறந்தகால விகுதியாகும். தன்மை, முன்னிலை இறந்தகால வினைகளில் மட்டுமே இந்த விகுதியின் நிகழ்ச்சி காணப்படுகிறது.

48.0 வினைப்பகுதி: சேரு; இறந்தகாலப்பகுதி; சேரித்

(1) *சேரின்ற்உ > சேரிற்று (இன்ற்உ > இற்று)

(2) சேரிற்று > சேரித்து (இற்று > இத்து)

(3) சேரித்து > சேரித்(உ) (த்து > த்உ)

சேரித் + இனி > சேரித்இனி 'சேர்ந்தேன்'

49.0 வினைப்பகுதி: பாடு; இறந்தகாலப்பகுதி: பாடித்

(1) * பாடின்ற்உ > பாடிற்று (இன்ற்உ > இற்று)

(2) பாடிற்று > பாடித்து (இற்று > இத்து)

(3) பாடித்து > பாடித் (உ) (த்து > த்உ)

பாடித் + இமி > பாடித்இமி 'பாடினோம்'

50.0 வினைப்பகுதி: தினு; இறந்தகாலப்பகுதி: தினித்

(1) * தினின்ற்உ > தினிற்று (இன்ற்உ > இற்று)

(2) தினிற்று > தினித்து (இற்று > இத்து)

(3) தினித்து > தினித் (உ) (த்த் > த்உ)

தினித் + இனி > தினித்இனி 'தின்றாய்'

(4) தினித்உ > தின்த்உ (இ > ϕ /-த்உ)

(5) தின்த்உ > தின்ற்உ (த் > ற் / ன்-)

(6) தின்ற்உ > திண்ட் (உ) (ன்ற் > ண்ட்)

திண்ட் + இரி > திண்ட்இரி 'தின்றீர்'

3.6 கால்டுவெல் (1856/1961), சுப்ரமண்யம் (1971), கிருஷ்ணமூர்த்தி (2003) ஆகியோர் தெலுங்கு இறந்தகால விகுதிகளைப் பற்றி அழுத்தமாகச் சிந்தித்துள்ளனர். கால்டுவெல் இறந்தகாலத் தெலுங்கு வினையெச்சங்கள் இகரத்தை மட்டுமே விகுதியாகக் கொண்டாலும் தன்மை முன்னிலை வினைமுற்றுக்களில் இந்த விகுதியையடுத்தும் இயைபு விகுதிகளின் முன்பும் **தி** என்பதையே இறந்தகால விகுதியாக ஏற்கிறது எனக் குறிப்பிடுவார். இவர் கருதுகோளின்படி **பாடித்இனி** 'பாடினேன்' என்பதில் வினைப்பகுதியையடுத்து நிகழும் இகரம் காலப் பொருண்மையை உணர்த்துவதில்லை; அதனையடுத்து நிகழும் **தி** என்பதே இறந்தகால விகுதியாக இனங்காணப்படும்.[15]

3.7 **பாடித்இனி** என்பதில் நிகழும் இறந்தகால விகுதியைப்பற்றிய சுப்ரமண்யத்தின் கருதுகோள் சற்று வித்தியாசமானது. சுப்ரமண்யம் இந்த வினையில் நிகழும் இறந்தகால விகுதியை **-இத்-** என இனங்காண்பார். இந்த விகுதியை அவர்

*-**இத்த்-** என மீட்டுருவாக்கம் செய்வார். இந்த அமைப்பானது **இ**, **த்த்** ஆகிய இரண்டு இறந்தகால விகுதிகளின் தொகுப்பு என சுப்ரமண்யம் கருதுவார். அவரது கருதுகோள் பின்வருமாறு: “In old Telugu and Konda - Kui - Kuvi, the suffix * **tt (>t)** has combined with the ***i** producing ***-itt-.** Since the other Central Dravidian languages seem to have lost the **i** in this at a later stage, it seems probable that this innovation took place in the PCDr stage itself. It is however certain that the suffix ***-tt-** gained currency in this group at the expense of ***i** and ***nt**. Telugu has extremely simplified its past tense formation by extending the suffix **-it-** to all verbs excepting a few of the type (C) Vnu” (Subrahmanyam, P.S.1971:218).

3.8 கிருஷ்ணமூர்த்தியின் இது தொடர்பான ஆய்வும் கருத்தில் கொள்ளத்தக்கதாகும். தெலுங்கு இறந்தகால விகுதிகளுள் ஒன்றாக -(இ)த்இ- என்பதையும் இவர் கருத்தில் கொள்வார். அதாவது **பாடித்இனி** என்ற இறந்தகால வினையை இவர் **பாடு-இத்இ-னி** என்ற அமைப்பினதாகக் கொள்வார். ஆயினும் -தி- என்பதையே இயல்பான இறந்தகால விகுதியாக இவர் கருதுவார். இவருடைய கருதுகோள் பின்வருமாறு: “It seems that **-ti**-was the original past (cf.win-ti-ni 'I

heared') and the -I-preceding **-ti** could be epenthetic. Pure **-i-** /-iy- occurs in the 3sg -e-n (<iy-, an; -an 3m.sg.) in which the gender - number morph got obscured because of sandhi and hence was generalized as 3sg. and inanimate plural. The perfective participle is formed by adding -i-e.g. **cepp-i** 'having said' (Krishnamurti, Bh. 2003:297). இவருடைய ஆய்வில் **-இத்இ-** என்பதில் முதலில் நிகழும் இகரம் இலக்கண உருபனாகக் கருதப்படவில்லை. அதனை அடுத்து நிகழும் **தி** என்பதை மட்டுமே இறந்தகால விகுதியாகக் கிருஷ்ணமூர்த்தி கருதுவார்.

3.9 இங்கே நாம் மேற்கொண்ட ஆய்வில் தெலுங்கு இறந்தகால விகுதியாக **-இத்-** என்பதே இனங்காணப்படுகிறது. இந்த விகுதியானது ***-இன்றஉ-** என்ற அடிநிலை வடிவத்திலிருந்து தோன்றி நிகழ்வதாக நமது ஆய்வு அமைகிறது. ஒரு வகையில் சுப்ரமண்யத்தின் ஆய்வின் ஒரு பகுதி நாம் மேற்கொண்டுள்ள ஆய்வுடன் பொருந்துவதாகக் காணப்படுகிறது.

3.10 ஓர் இடைப்பிறவரலாக, தெலுங்கு தன்மை, முன்னிலை வினைமுற்றுக்களில் நிகழும் இயைபு விகுதிகளைப்பற்றி இங்கே குறிப்பிடவேண்டும். **-கும்**, **-டும்**, **-தும்**, **-றும்** ஆகியவற்றைத் தொல்காப்பியர் தன்மைப் பன்மை விகுதிகளாகக் கருதினாலும் இவற்றில் நிகழும் **-உம்** என்பதையே நாம் தன்மைப் பன்மை விகுதியாகக் கொள்கிறோம். இந்த விகுதிதான் தெலுங்கிலும் ஈற்றில் உகரம் பெற்றுத் தன்மைப் பன்மை விகுதியாக நிகழ்கின்றது. **-இத்-** என்பதையடுத்து **-உனு**, **-உமு** ஆகிய தன்மை ஒருமை, பன்மை விகுதிகள் நிகழும்போது உயிரொலி இயைபின் (Vowel Harmony) காரணமாக ***பாடித்+உனு** > **பாடித்இனி, பாடித்+உமு** › **பாடித்இமி**.[16] என்று திரிந்தமைகின்றன.

3.11 கொண்ட: இந்த மொழியில் **-இத்-**, **-த்-** ஆகியவை இறந்தகால விகுதிகளாகும்.

51.0 வினைப்பகுதி: கூட் (ku□); இறந்தகாலப்பகுதி: கூடித் (ku□it-)

| | |
|---|---|
| (1) *கூடின்றஉ > கூடிற்று | (இன்றஉ > இற்று) |
| (2) கூடிற்று > கூடித்து | (இற்று > இத்து) |
| (3) கூடித்து > கூடித்(உ) | (இத்து > இத்) |

ஈற்று உகரம் கெட்டு **கூடித்** 'கூடி' என்பது இறந்தகாலப் பகுதியாக நிகழ்கிறது. எ-டு. **கூடித்+அ** ‹ **கூடித்-அ** 'கூடினேன்'

52.0 வினைப்பகுதி: உண்; இறந்தகாலப்பகுதி: உட்

(1) *உணின்றஉ > உணிற்று (இன்றஉ > இற்று)

(2) உணிற்று > உணித்து (இற்று > இத்து)

(3) உணித்து > உண்த்து (இ > $\phi$/-த்து)

(4) உண்த்து > உண்ட்டு (த்த் > ட்ட /ண்-)

(5) உண்ட்டு > உட்ட்டு (ண் > ட்/-ட்ட்)

(6) உட்ட்டு > உட்ட்(உ) (ட் > $\phi$/ ட்-ட்)

(7) உட்ட் > உட் ‘குடித்து’ (ட்ட் > ட்)

53.0 வினைப்பகுதி: சா; இறந்தகாலப்பகுதி: சாத்

(1) *சாயின்றஉ > சாயிற்று (இன்றஉ > இற்று)

(2) சாயிற்று > சாயித்து (இற்று > இத்து)

(3) சாயித்து > சாய்த்து (இ > $\phi$ -த்த்)

(4) சாய்த்து > சாய்த்உ (த்த் >த்)

(5) சாய்த்உ > சாத்உ ‘செத்து’ (ய் > $\phi$ -த்)

54.0 வினைப்பகுதி: தின்; இறந்தகாலப்பகுதி: திற் ‘திற’

(1) *தினின்றஉ > தினின்று (இன்றஉ > இன்று)

(2) தினின்று > தினிந்து (இன்று > இந்து)

(3) தினிந்து > தினிது (ந் > $\phi$/-த்)

(4) தினிது > தின்து (இ > $\phi$/-த்)

(5) தின்து > தின்று (த் > ற் /ன்-)

(6) தின்று > திறு (ன் > $\phi$/-ற்)

(7) திறு > திற் ‘தின்று’ (-உ > - $\phi$)

3.12. பெங்கொ: **-இத்-**, **-ச்-** ஆகியவை இந்த மொழியில் இறந்தகால விகுதிகளாகும்.

55.0 வினைப்பகுதி: த; இறந்தகாலப்பகுதி: தத்-

(1) *தரின்றஉ > தரிற்று (இன்றஉ > இற்று)

(2) தரிற்று > தரித்து (இற்று > இத்து)

(3) தரித்து > தர்த்து (இ > $\phi$/ -த்த்)

(4) தர்த்து > தர்த்(உ) (த்த் > த்)

(5) தர்த் > தத் 'தந்து' (ர் > ф/-த்)

56.0 வினைப்பகுதி: தின்; இறந்தகாலப்பகுதி: திச்-

(1) *தினின்றஉ > தினிற்று (இன்றஉ > இற்று)

(2) தினிற்று > தினிச்சு (இற்று > இச்சு)

(3) தினிச்சு > தினிச்உ (இச்சு > இச்உ)

(4) தினிச்உ > தின்ச்(உ) (இ > ф/ன்-ச்உ)

(5) தின்ச் > திச் 'தின்று' (ன்> ф/-ச்)

3.13 குவி: இந்த மொழியில் **-இத்-** என்பது இறந்தகால விகுதியாகும்.

57.0 வினைப்பகுதி: வா; இறந்தகாலப்பகுதி: வாத்

(1) *வாரின்றஉ > வாரிற்று (இன்றஉ > இற்று)

(2) வாரிற்று > வாரித்து (இற்று > இத்து)

(3) வாரித்து > வாரித்உ (இத்து > இத்உ)

(4) வாரித்உ > வார்த்(உ) (இ > ф/ர்-த்)

(5) வார்த் > வாத் (ர் > ф/ -த்)

58.0 வினைப்பகுதி: அஜ்ஜ்; இறந்தகாலப்பகுதி: அஜ்ஜித்-

(1) * அஞ்சின்றஉ > அஞ்சிற்று (இன்றஉ > இற்று)

(2) அஞ்சிற்று > அஞ்சித்து (இற்று > இத்து)

(3) அஞ்சித்து> அஞ்சித் (உ) (இத்து > இத்உ)

(4) அஞ்சித் > அஜ்ஜித் 'அஞ்சி' (ஞ்ச் > ஜ்ஜ்)

3.14 குயி: -இத்-, -த்- (-t-) ஆகியவை இந்த மொழியில் இறந்தகால விகுதிகளாகும்.

59.0 வினைப்பகுதி: தோஞ்ச் (tōñj); இறந்தகாலப்பகுதி: தோஞ்சித் (tōñjit)

(1) *தோன்றின்றஉ > தோன்றிற்று (இன்றஉ > இற்று)

(2) தோன்றிற்று > தோன்றித்து (இற்று > இத்து)

(3) தோன்றித்து > தோன்றித்(உ) (இத்து > இத்உ)

(4) தோன்றித் > தோஞ்சித் 'தோன்றி' (ன்ற் > ஞ்ச்)

60.0 வினைப்பகுதி: கோ; இறந்தகாலப்பகுதி: கோத்

(1) *கோயின்ற்உ > கோயிற்று (இன்ற்உ > இற்று)

(2) கோயிற்று > கோயித்து (இற்று > இத்து)

(3) கோயித்து > கோயித்(உ) (இத்து > இத்உ)

(4) கோயித் > கோய்த் (இ > ф / ய்-த்)

(5) கோய்த் > கோத் 'கொய்து' (-ய்>- ф)

கோத் + ஏ > கோத்ஏ 'கொய்தேன்'....

61.0 வினைப்பகுதி: உண்; இறந்தகாலப்பகுதி: உட்-

(1) 'உணின்ற்உ > உணிற்று (இன்ற்உ > இற்று)

(2) உணிற்று > உணித்து (இற்று > இத்து)

(3) உணித்து > உணித்(உ) (இத்து > இத்உ)

(4) உணித் > உண்த் (இ > ф /ண-த்)

(5) உண்த் > உண்ட் (த் > ட் /ண-)

(6) உண்ட் > உட்ட் (ண > ட் /-ட்)

(7) உட்ட் > உட் 'குடித்து' (ட்ட் > ட்)

62.0 வினைப்பகுதி: தின்; இறந்தகாலப்பகுதி: திஸ்-

(1) * தினின்ற்உ > தினிற்று (இன்ற்உ > இற்று)

(2) தினிற்று > தினிச்சு (இற்று > இச்சு)

(3) தினிச்சு > தினிச்உ (இச்சு > இச்உ)

(4) தினிச்உ > தினிசு (ச்உ > சு)

(5) தினிசு > தின்சு (இ > ф /ன்-ச்)

(6) தின்சு > திச்(உ) (ன் > ф /-சு)

திச் > திஸ் 'தின்று' (ச் > ஸ்)

3.15.கோலாமி: -த்- (-t-), -d- ஆகியவை இந்த மொழியில் இறந்தகால விகுதிகளாகும்.

63.0 வினைப்பகுதி: பாடு (pa□) இறந்தகாலப்பகுதி: பாட்த் (pa□t-)

(1) *பாடின்ற்உ > பாடிற்று (இன்ற்உ > இற்று)

(2) பாடிற்று > பாடித்து (இற்று > இத்து)

(3) பாடித்து > பாடித்(உ) (இத்து > இத்உ)

(4) பாடித் > பாட்த் 'பாடி' (இ > /ட்-த்)

64.0 வினைப்பகுதி: சுடு (cu□u) 'சமை'; இறந்தகாலப்பகுதி: சுட்த் - (cu□t-)

(1) *சுட்-இன்ற்உ > சுடிற்று (இன்ற்உ > இற்று)

(2) சுடிற்று > சுடித்து (இற்று > இத்து)

(3) சுடித்து > சுடித்(உ) (இத்து > இத்உ)

(4) சுடித் > சுட்த் 'சமைத்து' (இ > ϕ/ட்-த்)

**சுடு** என்ற வினைப்பகுதி -**இன்ற்உ** என்ற இறந்தகால விகுதியின் முன் **சுட்** எனச் சார்ந்துருபாக நிகழும்.

65.0 வினைப்பகுதி: தூல் 'ஓடு'; இறந்தகாலப்பகுதி: தூட் 'ஓடி'

(1) *தூளின்ற்உ > தூளிற்று (இன்ற்உ > இற்று)

(2) தூளிற்று > தூளித்து (இற்று > இத்து)

(3) தூளித்து > தூளித்(உ) (இத்து > இத்உ)

(4) தூளித் > தூள்த் (இ > ϕ/ள்-த்)

(5) தூள்த் > தூள்ட் (த் > ட் /ள்-)

(6) தூள்ட் > தூட்ட் (ள் > ட் /-ட்)

(7) தூட்ட் > தூட் 'ஓடி' (ட்ட் > ட்)

**துள்ளு** என்னும் தமிழ் வினை கோலாமியில் **தூல்** என அமைந்து 'ஓடு' என்னும் பொருண்மையைக் குறிக்கும். **தூட்** என்ற இறந்தகாலப் பகுதி அதன் வினையடி **தூள்** என்பதை உணர்த்துகிறது. கோலாமியில் **தூள்** என்பது **தூல்** எனத் திரிந்து வழங்குகிறது.

66.0 வினைப்பகுதி: வர்; 'வா'; இறந்தகாலப்பகுதி: வத்த் 'வந்து'

(1) *வரின்ற்உ > வரிற்று (இன்ற்உ > இற்று)

(2) வரிற்று > வரித்து (இற்று > இத்து)

(3) வரித்து > வர்த்த்(உ) (இ > ϕ/-த்த்)

(4) வர்த்த் > வத்த் (ர் > /-த்த்)

வத்த் + அன் > வத்தன் 'வந்தேன்'

67.0 வினைப்பகுதி: தின்; இறந்தகாலப்பகுதி: திந்த் (tind-)

(1) *தினின்ற்உ > தினின்று (இன்ற்உ > இன்று)

(2) தினின்று > தினிந்து (இன்று > இந்து)

(3) தினிந்து > தின்ந்து (இ > ϕ / ன் - ந்த்)

(4) தின்ந்து > தின்ன்று (ந்த் > ன்ற் /ன்-)

(5) தின்ன்று > தின்று (தமிழ்) (ன் > ϕ /ன் - ற்)

(6) தின்று > திந்த் (உ) (ன்ற் > ந்த்)

3.16 பர்ஜி: பர்ஜியில் **-த்-**, **-ந்-**, **-ஞ்-**, **-d-** ஆகியவை இறந்தகால விகுதிகளாகும்.

68.0 வினைப்பகுதி: நில்ப் 'நில்'; இறந்தகாலப்பகுதி: நில்த்- 'நின்று'

(1) *நிலின்ற்உ > நிலிற்று (இன்ற்உ > இற்று)

(2) நிலிற்று > நிலித்து (இற்று > இத்து)

(3) நிலித்து > நிலித்(உ) (இத்து > இத்உ)

(4) நிலித் > நில்த் 'நின்று' (இ > ϕ /ல்-த்)

69.0 வினைப்பகுதி: அட் (a□) 'அழு', இறந்தகாலப்பகுதி: அட்ந் - (a□n–) 'அழுது'

(1) *அழு-ன்ற்உ > அழுன்று (ன்ற்உ > ன்று)

(2) அழுன்று > அழுந்து (ன்று > ந்து)

(3) அழுந்து > அழுந்நு (த் > -ந் /ந்-)

(4) அழுந்நு > அழுந்(உ) (ந் > ϕ /-ந்)

(5) அழுந் > அழ்ந் (உ > ϕ /-ந்)

(6) அழ்ந் > அட்ந் (a□n) 'அழுது' (ழ் > □ /-ந்)

***-இன்ற்உ** என்ற இறந்தகால விகுதி **அழு** என்னும் வினையையடுத்து **-ன்ற்உ** என்ற சார்ந்துருபாக நிகழ்கிறது.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# தொல்காப்பியம் கூறும் கவிதை மொழி

பேரா **ப.மருதநாயகம்**
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113
கைபேசி: 94427 87727

**சென்ற இதழின் தொடர்ச்சி**

**4**

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்திலேயே சில நூற்பாக்களில் எழுத்துக்கள் செய்யுளில் பெறக்கூடிய மாற்றங்களைச் சொல்கிறார்.

1. செய்யுள் இறுதிப் போலும் மொழிவயின்
னகார மகாரம் ஈரொற்று ஆகும். (51)

(செய்யுளில் சொல்லின் இறுதியில் 'போலும்' எனும் சொல் வந்தால் அது 'போன்ம்' என்று இரண்டு ஒற்றுக்களாய் ஆகும்.)

'சிதையும் கலத்தைப் பயினால் திருத்தித் திசை அறி மீகானும் போன்ம்' (பரி.10:55)

2. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது
நீட வருதல் செய்யுளுள் உரித்தே. (207-208)

(அகரச் சுட்டின்முன் உயிர்முதல் மொழியாக வந்தாலும் வகரம் மிக்கு முடியும் தன்மையில் மாற்றம் இல்லை. அகரச் சுட்டுக்கு நீண்டு வருதல் செய்யுளில் நிகழும்.)

அ + இடை → ஆயிடை

3. பலவற்று இறுதி நீடுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான. (213)

(செய்யுளில் பொருள் தொடர்ச்சியை நிறைவு செய்யும் பொருட்டுப் பல என்னும் சொல்லின் இறுதி அகரம் நீண்டு முடியும்.)

பல › பலா; சில › சிலா

'பலா அம் சிலா அம் என்மனார் புலவர்.'

4. குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே. (234)

(அரா, புறா, சுறா போன்ற சொற்கள் செய்யுளில் இறுதிச் சினைகெட்டு உகரம் பெறுவது ஏற்புடைத்து.)

அரா → அரவு; புறா → புறவு; சுறா → சுறவு; நிலா → நிலவு

5. இன்றியென்னும் வினையெஞ்சு இறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
**தொன்றியல் மருங்கின்** செய்யுளுள் உரித்தே. (237)

('இன்றி' என்னும் வினையெஞ்சு இறுதி செய்யுள் வழக்கில் உகரம் பெறுதல் தொன்மையான மரபாகும்.)

உப்பின்றி + உண்க > உப்பின்று உண்க

'அன்றி' என்பதும் செய்யுளில் இம்முடிவு கொள்ளும்.

'நாளன்று போகி' (புறம்.124)

6. அன்று வருகாலை ஆ ஆகுதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கில் உரித்தென மொழிப. (258)

(மூன்று சுட்டுமுதல் இறுதிகளும் செய்யுளில் ஒன்று என்னும் சொல்லை எதிர்கொள்ளும் போது உகரம் ஆகாரம் ஆகும்.
ஐ என்னும் சாரியை இடையில் வந்து முடியும்போது அவ்வுகரத்தின் மீது ஊர்ந்த மெய்கெடும்.)

அது + அன்று > அதான்று

அது + ஐ + அன்று > அதையன்று

"அதா அன்றென்ப வெண்பா யாப்பே"

7. விண் என வரூஉம் காயப் பெயர் வயின்
உண்மையும் உரித்தே அத்து என் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை (305)

(ஆகாயத்தைக் குறிக்கும் விண் என்னும் பெயர் செய்யுளில் வினைச்சொல் முன்வரும்போது அத்துச்சாரியை பெறும்.)

விண் + கொட்கும் > விண்ணத்துக் கொட்கும்

"விண்ணத்துக் கொட்கும் விரைசெல் ஊர்தியோய்."

8. இலம் என் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலும் உரித்தே செய்யுளான" (316)

(செய்யுளில் இலம் எனும் சொல்முன் படு எனும் சொல் வரும்போது மகர ஈறு கெடாது நிற்பதற்கு உரியதாகும்.)

இலம் + படு > இலம்படு

"இலம்படு புலவர் ஏற்றகை நிறைய" (மலைபடுகடாம். 576)

9. பொன் என்கிளவி ஈறுகெட முறையின்
முன்னர்த்தோன்றும் லகார மகாரம்
செய்யுள் மருங்கில் தொடர் இயலான. (356)

(செய்யுளில் பொன் என்னும் சொல்லின் னகரம் கெட லகார, மகாரம் சேர்ந்து, பொலம் என்று ஆகி இயல்பாக வரும்.)

பொன் + பூ > பொலம்பூ

"பொலம்படப் பொலிந்த கொய்சுவற் புரவி"

"பொலந்தேர்க்குட்டுவன்"

இம்மாற்றங்களெல்லாம் தொன்மையான மரபின என்று தொல்காப்பியரே சுட்டுவதால் தமிழ்ச் செய்யுள் எவ்வளவு பழமையானது என்பது புலப்படும்.

5

சொற்களைக் கையாளும் புலவனுக்குரிய உரிமைகளைச் சொல்லதிகார நூற்பாக்கள் சிலவும் தெரிவிக்கும்.

1. இனச்சுட்டு இல்லாப் பண்புகொள் பெயர்க் கொடை
வழக்காறு அல்ல செய்யுள் ஆறே. (18)

(இனமில்லாத பொருள்களின் முன்னர்ப் பண்பை விளக்கும் அடையாகிய சொல்லை இணைத்துக்கூறுதல் உலக வழக்கு அன்று; செய்யுள் வழக்காகும். ஒரு தன்மை கொண்ட ஒருபொருள் இனமில்லாப் பொருளாகும்; மற்றவை இனமுள்ள பொருள்களாகும்.)

செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண்திங்களுள் வெயில் வேண்டினும் (புறம்.38)

ஞாயிறும் திங்களும் இனமில்லாத பொருள்கள்; அவற்றிற்குச் செஞ்ஞாயிறு, வெண்திங்கள் என்று அடைகொடுத்துக் கூறுவது செய்யுள் வழக்கு. இனமுள்ள பொருளான தாமரையைச் செந்தாமரை, வெண்தாமரை என்று அடைகொடுத்தே உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் கூற வேண்டும்.

2. ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின்று என்ப வழக்கின் உள்ளே. (22)

(உலக வழக்கில் ஆக்கச் சொல் காரணம் இன்றியும் வரும். அது குற்றம் ஆகாது.

பைங்கூழ் நல்ல ஆயின.

செய்யுள் வழக்கில் ஆக்கச் சொல் காரணம் பெற்றே வருதல் வேண்டும்.)

3. அடைசினை முதல் என முறை மூன்றும் மயங்காமை
நடைபெற்று இயலும் வண்ணச்சினைச் சொல். (26)

(ஓர் அடையும், ஒருசினையும், ஒருமுதலும் என வரும் வண்ணச்சினைச் சொல், அடை, சினை, முதல் என ஒன்றையடுத்து ஒன்று உலக வழக்கில் வருதல் வேண்டும்.)

செங்கால் நாரை

செம்மை - அடை; கால் - சினை; நாரை - முதல்

செய்யுளில் இம்மூன்றும் முறை மாறி வரலாம்.

செவி செஞ்சேவல்

செவி - சினை; செம்மை - அடை; சேவல் - முதல்.

4. இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க்கிளவியும்
வினைக்கு ஒருங்கு இயலும் காலம் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்
முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே. (38-39)

(ஒரு பொருளைக்குறித்து இயற்பெயரும் சுட்டுப்பெயரும் வேறு வேறு வினைகளைக் கொள்ளுதற்கு உரிய காலம் ஒருங்கே தோன்றின், இயற்பெயரை முன்னும் சுட்டுப்பெயரைப் பின்னும் கூறவேண்டும். சுட்டுப்பெயரை முன்னும் இயற்பெயரைப் பின்னும் கூறுதல் செய்யுளுக்கு மட்டும் உரியதாகும்.)

**சேரன்** வந்தான்; **அவனுக்குச்** சோறிடு

**அவன்** அணங்குநோய் செய்தான் ஆயிழாய்! வேலன்
விறன் மிகுதார்ச் **சேந்தன்** பேர் வாழ்த்தி - முகன் அமர்ந்து
அன்னை அலர்கடப்பம் தாரணியில் என்னை கொல்
பின்னை அதன்கண் விளைவு.

5. கு ஐ ஆன் என வரூஉம் இறுதி
அவ்வொடு சிவணும் செய்யுளுள்ளே. (108)

(செய்யுளில் தொடர்மொழிகளின் இறுதியில் வரும் கு, ஐ, ஆன் என்னும் வேற்றுமை உருபுகள் அகரச்சாரியையோடு பொருந்திவரும்.)

கு → க

கடிநிலை இன்றே ஆசிரியர்க்கு → கடிநிலை இன்றே ஆசிரியர்க்க

ஐ → அ

காவலோ**னைக்** களிறு அஞ்சும்மே காவலோ**னக்**களிறு அஞ்சும்மே

ஆன் → அ

புரைதீர் கேள்விப் புலவ**ரான்** → புரைதீர் கேள்விப் புலவ**ரான**

6. ஆ ஓ ஆகும் பெயருமார் உளவே
ஆயிடன் அறிதல் செய்யுளுள்ளே. (195)

(செய்யுளில் சில பெயர்களின் ஈற்று அயலில் நிற்கும் ஆகரம் ஓகாரமாகத் திரியும். இதனை இடம் நோக்கி ஆராய்ந்து அறிந்து கொள்ளவேண்டும்.)

வில்**லோன்** காலன கழலே தொடி**யோள்**
மெல்லடி மேலவும் சிலம்பே நல்**லோர்**
.......................
வேய் பயில் அழுவ முன்னி**யோரே**. (குறுந்தொகை 7)

வில்லான் → வில்லோன்; தொடியாள் → தொடியோள்; நல்லார் → நல்லோர்; முன்னியார் → முன்னியோர்.

7. இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்
இயற்பெயர்க்கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கில் தோன்றலான. (196)

செய்யுளில் இடம்பெறும் கருப்பொருள்களாகிய சில அஃறிணை இயற்பெயர்கள் உயர்திணைக்குரிய ஈறுகளைப் பெற்று வருமாயினும் அவை அவ்வந்நிலத்து அஃறிணைப் பொருள்களாக வழங்கப்பெறுவதால் உயர்திணையை உணர்த்தா.)

கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை அயர்ந்த வன் பறழ்க்குமரி

கடுவன், மூலன் என்னும் சொற்கள் ஆண்பாலுக்குரிய அன் ஈறுபெற்றுநின்றன. ‘குமரி’ என்னும் சொல்லில் பெண்பாலை உணர்த்தும் இகர ஈறு இடம் பெற்றுள்ளது. இவை உயர்திணையைச் சுட்டாமல் அஃறிணையைக் குறித்து நிற்கும்.

8. பாலறி மரபின் அம்மூ ஈற்றும்

ஆ ஓ ஆகும் செய்யுளுள்ளே. (211)

(உயர்திணையில் பால் விளங்க வரும் ஆன், ஆள், ஆர் என்னும் மூன்று ஈறுகளில் உள்ள ஆகாரம் செய்யுளில் ஓகாரமாய்த் திரியும்.)

வினவி நிற்றந்**தோனே** (அகநானூறு 48)

நிற்றந்**தான்** → நிற்றந்**தோன்**

நல்லை மன்னென நகூஉப்பெயர்ந்**தோளே** (அகநானூறு 248)

நகூஉப் பெயர்ந்தாள் → நகூஉப்பெயர்ந்**தோள்**

பாசிலை வாடா வள்ளியம் காடிறந்**தோரே** (குறுந்தொகை 214)

**காடிறந்தார்** → காடிறந்**தோர்**

9. ஆய் என் கிளவியும் அவற்றொடு கொள்ளும். (212)

(ஆய் என்பதில் உள்ள ஆகாரம் செய்யுளில் ஓகாரமாய்த் திரியும்.)

வந்**தோய்** மன்ற தண்கடற் சேர்ப்ப (அகநானூறு 80)

வந்**தாய்** → வந்தோய்

## 6

இடைச்சொல்லின் இலக்கணம் கூறும் இடையியலில் இடைச்சொற்களை வகைப்படுத்தி அவற்றுள் பல செய்யுளில் எவ்வெப்பொருள்களில் வரும் என்பதை விளக்குவார். தமிழில் உள்ள இடைச்சொற்களின் அருமையையும் பயன்பாட்டையும் அறியாதார் சிலர் இடைச்சொற்கள் ஒரு மொழிக்குத் தேவையற்றவை என்பர். அவர்தம் மொழிகளில் இத்தகைய இடைச்சொற்கள் இல்லாமையால் வாலறுந்த நரிகள்போல் இவ்வாறு பேசுவர்.

இருசொற்கள் புணரும்போது அவற்றின் பொருள்நிலைக்குத் துணைநிற்பவை *(சாரியை)*, வினைச்சொற்களில் காலம் காட்டும் உறுப்பாய் வருபவை, வேற்றுமைத் தொகைகளைத் தொடர்களாக்கி நிற்பவை (வேற்றுமை உருபுகள்), தமக்கெனப் பொருளின்றித் தாம் சார்ந்த பொருளை வேறுபடுத்தி வருபவை (அசைநிலை), செய்யுளில்

பொருள் உணர்த்தாமல் இசை நிறைத்தல் பொருளில் வருபவை (இசைநிறை), குறிப்பால் பொருள் உணர்த்தும் சொற்கள், இரண்டு பொருள்களை ஒப்புமைப்படுத்தவரும் சொற்கள் (உவம உருபுகள்) என்று இடைச்சொற்கள் ஏழு வகைப்படும். இடைச்சொற்கள் தாம் சார்ந்துவரும் சொல்லுக்கு முன்னும், பின்னும் ஈறுகள் திரிந்தும் ஒன்றோடொன்று சேர்ந்து வரும் தன்மையவை.

பல இடைச்சொற்களைப் பட்டியலிடும் தொல்காப்பியர் அவை குறிக்கும் பொருளையும் தெளிவுபடுத்துவார். உரையாசிரியர்கள் அவற்றுக்கான சான்றுகளைச் சங்க இலக்கியங்களிலிருந்து தருவர். இச்சான்றுகள் தமிழ்க்கவிஞர்கள் இடைச்சொற்களை எவ்வளவு நுட்பமாகப் பயன்படுத்திக்கொண்டனர் என்பதைப் புலப்படுத்தும். அவை வெற்றுச்சொற்கள் அல்ல என்பதையும் நாம் உணரமுடியும். 'மன்' என்னும் இடைச்சொல் நீங்குதல், ஆகம், ஒழியிசை என்னும் மூன்று பொருளைத்தரும். (252) ஔவையார் "சிறிய கட்பெறினே எமக்கு ஈயும் மன்னே" (புறம் 235) என்னும் பாடலில் 'மன்னே' என்னும் இடைச்சொல்லை 'அது கழிந்தது' என்னும் பொருளில் ஏழு இடங்களில் பயன்படுத்தி, அரியதோர் இரங்கற்பாவைத் தருகிறார். தொல்காப்பியம் கூறும் ஏனைய இடைச்சொற்களும் சங்கச்சான்றோர் பாடல்களில் பொருள் பொதிந்தவையாக மிளிரக் காணலாம். 'தில்' என்னும் இடைச்சொல் விருப்பம், காலம், ஒழியிசை என்னும் மூன்று பொருள் குறித்து வரும். 'கொன்' என்னும் இடைச்சொல் அச்சம், பயன் இன்மை, காலம், பெருமை என்னும் நான்கு பொருள்களை வெளிப்படுத்தும். கீழ்க்கண்ட இடைச்சொற்கள் தமிழ்க்கவிதை மொழி பெற்றுள்ள பெருவளத்திற்கு வரலாற்று ஆவணங்கள் ஆகும்.

| **இடைச்சொல்** | **பொருள்** |
|---|---|
| உம் | - எச்சம், சிறப்பு, ஐயம், எதிர்மறை, முற்று, எண் தெரிநிலை, ஆக்கம் (8) |
| ஓ | - பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு (6) |
| ஏ | - தெளிவு, வினா, பிரிநிலை, எண், ஈற்றசை (5) |
| என | - வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் (6) |
| என்று | - வினை, குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் (6) |
| தில் | - விழைவு |

| | |
|---|---|
| மற்று | - வினைமாற்று, அசைநிலை |
| மற்றையது | - மற்றொன்று |
| மன்ற | - தெளிவு |
| தஞ்சம் | - எளிமை |
| அந்தில் | - ஆங்கு, அசைநிலை |
| கொல் | - ஐயம் |
| எல் | - விளங்குதல் |
| ஆர் | - அசைநிலை |
| ஏ | - இசை நிறைத்தல், அசை நிலை |
| குரை | - இசை நிறைத்தல், அசைநிலை |
| மா | - வியங்கோள் அசைச்சொல் |
| மியா, இக, மோ, மதி, இகும், சின் | - அசைநிலை |
| அம்ம | - 'நான் கூறுவதைக்கேள்' என்னும் பொருள் தரும் |
| ஆங்க | - அசைநிலை |
| போலும் | - அசைநிலை |
| யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது | - அசைநிலை |
| ஆகஆக, ஆகல்ஆகல், என்பது என்பது | - அசைநிலை |

இடையியலின் இறுதியில் தொல்காப்பியர்,

**கிளந்த அல்ல வேறு பிற தோன்றினும்**

***கிளந்த வற்று இயலான் உணர்ந்தனர் கொளலே (296)***

என்பார். உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இருந்த இடைச்சொற்களையெல்லாம் திரட்டித்தந்த அப்பேராசான் அவற்றைப் போன்று வரும் பிறவற்றையும் ஏற்றுக்கொள்க என்று கூறுவது அவரது தன்னடக்கத்தையும் ஆழ்ந்த மொழிநூல் புலமையையும் காட்டும். அவர் கூறாது விடுத்த இடைச்சொற்கள் சில்வற்றையும் அவை வழங்குமாற்றையும் உரையாசிரியர்கள் தந்துள்ளனர். இது தமிழ் மொழியானது கவிதை ஊடகமாக ஆண்டுக்காண்டு எவ்வாறு வளமும் வளர்ச்சியும் பெற்றது என்பதைப் புலப்படுத்தும். இத்தகைய இலக்கண மரபு வேறு எம்மொழிக்கும் இல்லையென்பதை நாம் உணர்தல் நன்று.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# சைவசித்தாந்தமும் திருமந்திரமும்

- முனைவர் **உ.கருப்பத்தேவன்**
உதவிப்பேராசிரியர் - தலைவர் (பொ)
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

**முன்னுரை**

சைவசமயக் குரவர் நால்வராலும், அவர்கள் அருள்வழிவந்த அருளாளர்களாலும் அருளிச் செய்யப்பெற்றவையே பன்னிரு திருமுறைகளாகும். சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளக்கும் மெய்கண்ட சாத்திர நூல்கள் பதினான்கிற்கும் இத்திருமுறைகளே அடிப்படை ஆதாரங்களாகவும் மூலமாகவும் அமைந்திருக்கின்றன. பன்னிரு திருமுறைகளும் ஒரே தன்மையுடையன அல்ல. அவை தோத்திரம், சாத்திரம், பிரபந்தம், புராணம் என நான்கு வகைகளாக உள்ளன. ஒன்றுமுதல் ஒன்பது வரையிலான திருமுறைகள் தோத்திரங்கள் ஆகும். பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் சாத்திரமாகும். பதினொன்றாம் திருமுறை பிரபந்த வகையைச் சேர்ந்தது. பன்னிரெண்டாம் திருமுறையாகிய பெரியபுராணம் புராண வகையைச் சேர்ந்தது என்ற நிலையில் இவ்ஆய்வுக் கட்டுரையைக் காண்போம்.

**பத்தாம் திருமுறை திருமந்திரம்**

சைவத் திருமுறைகள் பன்னிரெண்டில் பத்தாம் திருமுறையாக விளங்குவது திருமூலரின் 'தமிழ் மூவாயிரம்' என்னும் திருமந்திரமாகும். இத்திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாக அமைந்துள்ளது. இந்த ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களின் பிழிவாகும். பதினான்கு சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் தோன்றுவதற்கு முன்னரே தமிழ்நாட்டில் சாத்திரநூலாகத் திகழ்ந்தது திருமந்திரமே. முதலிரண்டு சைவசித்தாந்த சாத்திரநூல்களான திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் திருமந்திரத்தின் வழிவந்தவையே. மேலும், சேக்கிழார் பெரியபுராணத்தில் புகழ்ந்து பாடிய அறுபத்துமூன்று நாயன்மார்களில் திருமூலரும் ஒருவராவார். தவஞானியாக விளங்கிய திருமூலர் சைவ சித்தாந்தத்தின் சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலான நான்கு நெறிகளையும் திருமந்திரத்தின் தீந்தமிழ்ப் பாடல்களில் தெளிவாக விளக்கிப் பாடியுள்ளார். எனவேதான் சுந்தரமூர்த்தி நாயனார் "நம்பிரான்

திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என அகம் குளிர்ந்து திருத்தொண்டத்தொகையில் பாடியுள்ளார்.

திருமந்திரப் பாடல்களில் 'தமிழர் சமயம்' பேசப்படுகின்றது. தமிழ்த் தத்துவம் விளக்கப்படுகின்றது. தமிழறம் போற்றப்படுகின்றது. இந்நூலினுள் அக்காலத்திலிருந்த சமயங்களின் முடிவுகள் எல்லாம் எளிமையான முறையில் விளக்கப்பெற்றுள்ளன. யோகத்துக்குச் சிறப்பிடம் தந்துள்ளார் திருமூலர். ஏனைய திருமுறை நூல்களைப்போல வழிபாடு மற்றும் சடங்குகளுக்குச் சிறப்பிடம் கொடுக்காமல், 'உள்ளம் பெருங்கோயில்', 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்பன போன்ற மெய்யான, உயர்வான பக்திக்கு முதலிடம் தந்துள்ளார் திருமூலர். சைவசித்தாந்தச் சிந்தனைகள் திருமந்திரத்தில் தனிச்சிறப்புடன் வெளிப்பட்டு நிற்கின்றன.

தமிழ்ப் பண்பாட்டின் பலகணியாகவும், தமிழ் ஞானத்தின் திறவுகோலாகவும், தமிழ்ச் சமயம் மற்றும் சமுதாயத்தின் தலைவாசலாகவும் திருமந்திரம் திகழ்ந்து வருகின்றது. ஆதலால் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் தமிழர்க்கு முத்தான பொதுமறையாகும். வேதாந்த, சித்தாந்த வெளிவாசல்களைத் தாண்டி, நாதாந்த வடிவமாக நாதனைக் காணும் ஞானம் திருமந்திரத்தில் காணப்படுகின்றது. சித்தத்திற்குள்ளே சிவனைக்காணச் சிந்தை செய்த மானுடப் பிறவியின் மகத்துவம் திருமந்திரத்தில் சிறப்பாகக் காணப்பெறுகின்றது.

'பாவச்சுமை' மானிடப்பிறவி என்று பாடிய பக்தர் கூட்டத்தை விட்டு விலகி 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' எனப் பாடியுள்ளார் திருமூலர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனப் புறம் பாடிய புலவனைப் போல 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' எனப்பாடிய ஆன்மநேய அருட்கவி அவர். 'ஏழைக்குச் செய்யும் உதவி இறைவனுக்குச் செய்யும் பூசை' எனத் திருமூலர் பூசைக்குப் புதுவிளக்கம் தந்துள்ளார். திருமந்திரத்தில் சைவசித்தாந்தக் கோட்பாடுகள் விரிவாகவும் விளக்கமாகவும் பாடப்பெற்றுள்ளன. இதுவே திருமந்திரத்தின் தனிச்சிறப்பாகும்.

**சைவ சித்தாந்தத்தில் இறைவன்**

எந்நாட்டவர்க்கும் இறைவனானவன் தென்னாட்டில் 'சிவன்' எனப் போற்றப்பெற்றான். தமிழ்நாட்டில் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட 'சைவ சமயம்' சங்ககாலத்தில் தோன்றியது. அச்சமயத்தின்

கருத்துக்களை நுணுக்கமாக விளக்குவதற்குத் தோன்றியதே 'சைவ சித்தாந்தம்' என்னும் சமயத்துறையாகும். இந்தியாவில் பல்வேறு சமயத் தத்துவங்கள் தோன்றியிருப்பினும் **"அகம் பிரம்மாஸ்மி', 'நானே கடவுள்'** என்னும் வேத தத்துவம், தமிழ்நாட்டில் பரவவில்லை. கர்நாடக மாநிலத்திலும் காஷ்மீரத்திலும் பரவிய சைவ சமயம் 'வீரசைவமாகவே' நிலவி வருகின்றது.

சைவ சித்தாந்தத்தின் அடிப்படையியல் 'பதி'யாகிய இறைவன், 'பசு'வாகிய உயிர், 'பாச'மாகிய தளை என்னும் முப்பொருள் தத்துவ உண்மையின் அடிப்படையில் தோன்றியதாகும். உலகின் அனைத்துச் சமயங்களும் உயிர்களை இறைவன் படைத்ததாகவே கூறுகின்றன. ஆயினும் சைவ சித்தாந்தம் மட்டுமே இறைவன் எவ்வளவு பழமையானவனோ, உயிர்களும் அவ்வளவு பழமையானவை எனக் கூறுகின்றது. அதுபோலவே பாசமாகிய தளைகளும் பழமையானவை. 'பதி, பசு, பாசம், (அனாதி) என்னும் முப்பொருள் கொள்கையை விளக்க எழுந்த நூல்களே 'பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரம்' எனச் சைவச் சான்றோர்களால் வழங்கப்பட்டு வருகின்றது.

**சைவமும் தமிழும்**

தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றில் சைவமும் தமிழும் இணைந்தே வளர்ந்து வந்துள்ளன. சங்கத் தமிழ்ப் பாடல்களில் 'சிவன்' என்னும் சொல் பயின்று வரவில்லை. ஆயினும் சிவனின் பண்பை விளக்கும் 'செம்மை' என்ற சொல் 'சிவன்' என்னும் பொருளில் ஆளப்பெற்றுள்ளது. 'சிறந்தது பயிற்றல்', 'சிறப்பெனும் செம்பொருள்' என்னும் தொடர்கள் இதற்குச் சான்றுகளாகும். தமிழர் நாகரிகம், சிந்து சமவெளி நாகரிகத்தின் தொடர்ச்சி எனக் கொண்டால், வேத நாகரிகத்திற்கும் முற்பட்டதாகச் சைவ சமயத்தைக் கொள்ளலாம்.

சங்க காலத்திற்குப் பின்னர் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்றன. பல்லவர் ஆட்சியில் மீண்டும் தமிழொடு சைவமும் உன்னத வளர்ச்சி நிலையைப் பெற்றது. தமிழ் ஞானசம்பந்தர் திருநெறித் தமிழில் 'பதிகப் பெருமை'யைத் தோற்றுவித்தார். அவரை அடியொற்றி வந்த சைவ அருளாளர்களின் தொண்டினால் தமிழும் சைவமும் செழித்தோங்கின. சோழர், பாண்டியர் காலங்கள் சைவ சமய வரலாற்றில் பொற்காலமாகத் திகழ்ந்தன.

" 'பன்னிரு திருமுறைகள்' தமிழ்ச் சைவசமயத்தின் அடிப்படை நூல்களாக அமைந்தன. மூவர் முதலிகளையும் மாணிக்கவாசகரையும்

சமயத் தலைவர்களாகவும், சிவனை முழுமுதற் பொருளாகவும், மாறா இறையன்பு ஒன்றே வீடுபேற்றிற்கு வழி என்பதும், சாதிமத வேறுபாடின்றி ஆணும் பெண்ணும் இறையின்பத்தைத் துய்த்து வாழலாம் என்பதும், சமய வாழ்வு இவ்வுலக வாழ்க்கைக்கு எதிரானதல்ல என்ற கொள்கையும் சைவர்களால் ஏற்கப்பட்டன. இந்தக் கொள்கைகள் சமண சமயத்தின் கடினமான அறிவுக் கொள்கைக்கும், கடவுள் மறுப்புக் கொள்கைக்கும், உலக வாழ்க்கை மறுப்புக்கும் மாற்றாக அமைந்தது மட்டுமல்லாமல் சமண சமயத்தின் நலிவுக்கும் காரணங்களாக அமைந்தன. சைவ சமயம் நாயன்மார்களை முன்னிறுத்தி ஒரு மக்கள் இயக்கமாகவே உருப்பெற்று வளர்ந்தோங்கியது. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மெய்கண்டார் ஆக்கிய 'சிவஞானபோதம்' சைவசமயத்தின் தத்துவக் கொள்கைகளை விளக்கும் முதல் அடிப்படை நூலாகும். சிவஞான போதத்திற்குப் பல உரைகள் இருப்பினும் சிவஞான முனிவரின் 'சிவஞானபோதமாபாடியம்' மட்டுமே சிறந்த உரையாகச் சைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது" (ந.சுப்புரெட்டியாரின் 'சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்' என்ற நூலுக்குப் பெ.கிருஷ்ணன் எழுதிய "அணிந்துரை", பக். ix-x).

உயிரின் ஆணவமல நீக்கத்தின் பொருட்டு ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை இறைவன் செய்கின்றான். ஐந்தொழில் செய்வது அவனின் சிறப்பிலக்கணமேயன்றிப் பொதுவிலக்கணம் அல்ல என்பது சிவஞான முனிவரின் கொள்கையாகும். உயிர் தனது சமய வாழ்வின் வாயிலாக 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதோடு' வீடுபேற்று நிலையினையும் அடையும். ஏனைய இந்தியச் சமயங்கள் பிறவியைத் துன்பமயமானது; அது வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியது; அது அறியாமையின் விளைவு என வலியுறுத்திய நிலையில் சைவ சமயம் மட்டுமே பிறவி, இறைவனால் அளிக்கப்பெற்ற 'அருட்கொடை' என்றும், அறியாமையைப் போக்கிக் கொள்வதே பிறவிப்பயன் என்றும் வலியுறுத்தியது.

**திருமந்திரத்தில் 'பதி'**

சைவ சித்தாந்தத்தில் 'முடிந்த முடிபாக'க் கொள்ளப்படுவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மைகளாகும். இவற்றுள் பதியின் இயல்பைக் காரைக்காலம்மையார் 'அற்புதத் திருவந்தாதி'யில் பின்வருமாறு பாடியுள்ளார்.

*"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே*
*அறிவாய் அறிகின்றான்தானே - அறிகின்ற*

*மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாசம்*
*அப்பொருளுந் தானே அவன்"*
*(காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி, பா.எண்.20)*

இதனைத் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார் தன்னுடைய 'திருக்களிற்றுப்படியார்' என்னும் சைவ சித்தாந்த நூலில்,

*"அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்பர் என்றறிக*
*அம்மையப்பர் அப்பரிசே அந்தளிப்பர் - அம்மையப்பர்*
*எல்லா உலகுக்கும் அப்புறத்தார், இப்புறத்தும்*
*அல்லால்போல் நிற்பார் அவர்"*
*(திருக்களிற்றுப்படியார், பா.எண்.1)*

என மேலும் தெளிவுபடுத்திப் பாடியுள்ளார். பதியை அறிவான், அறிவிப்பான், மெய்ப்பொருள், விரிசுடர், பூமி, ஆகாயம், அம்மையப்பன் என்று திருமந்திரத்திற்கு முன்னர் போற்றியிருப்பதை அறிய முடிகின்றது. திருமூலர் தன்னுடைய திருமந்திரத்தில் பன்னிரு திருமுறைகளும் சைவசித்தாந்த நூல்களும் தோன்றுவதற்கு முன்னரே 'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள் உண்மையைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

*திருமந்திரத்தின் முதல் தந்திரத்தில்,* ***'உபதேசம்'*** *என்னும்* பகுதியில் இடம்பெற்றுள்ள முதல்பாடல் பதி, பசு, பாசத்தின் இயல்புகளை நுணுக்கமாக எடுத்துரைக்கின்றது. பசுவாகிய உயிர்க் குலத்தைப் பாசமாகிய பந்தங்கள் இறுக்கமாகப் பிணைத்துள்ளன. பதி, பசு, பாசம் என்னும் இம்மூன்றனுள் பதியாகிய இறைவனைப் போலவே அவன் படைத்த உயிர்களும், அந்த உயிர்களைப் பற்றியிருக்கும் பாசமாகிய பந்தங்களும் மிகவும் பழைமையானவை. ஆயினும் பதியாகிய இறைவனைப் பசுக்களாகிய ஆன்மாக்கள் (உயிர்கள்) அணுகுவதுமில்லை. நெருங்குவதும் இல்லை. இதற்குக் காரணம் உயிர்களைப் பற்றியுள்ள பந்தங்கள் என்னும் பாசங்களாகும். பசுக்கள் பதியாகிய இறைவனை நெருங்கினால் அதனைப் பீடித்த பாசங்கள் நீங்கிவிடும். பதியை நாடப் பாசங்கள் விலகும் என்பதைத் திருமந்திரம்,

*"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்*
*பதியினைப் போல் பசு பாசம் அனாதி*
*பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்*
*பதிஅணுகில் பசு பாசம் நிலாவே"*
*(திருமந்திரம், முதல் தந்திரம், உபதேசம், பா.எண்.3 (115)*

என்னும் பாடலில் தெளிவுபடுத்தியுள்ளது. பதியாகிய பொருள் (இறைவன்) என்று தோன்றினானோ அன்றே பசுவாகிய உயிர்களும் தோன்றின. அன்றே அவ் உயிர்களைப் பிணித்துள்ள பாசத்தளைகளும் தோன்றின என்பது சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபாகும்.

**பரமனாகிய சிவனருள் பெற வழி:**

பாசங்களாகிய திரைகள் விலகினால் இறையருள்கிட்டும் என்கின்றார் திருமூலர். சிவசக்தியாகிய உமையை இடப்பாகமாகக் கொண்டருளிய சிவனை உள்ளத்தால் உணர்ந்தறிந்து, அப்பரமனின் அருள்பேற்றைப் பெற நெருங்குபவர்கள் **'பந்தபாசம்'** என்னும் பாவச் செயல்கள் நிறைந்த பெருங்கடலாகிய **மனமயக்கம், மாயை, மலங்கள்** என்னும் பிறவித்துயரிலிருந்து விடுபட்டுக் கரையேறி சிவனருளுக்கு முற்றிலும் பாத்திரமாகலாம். இதனைத் 'திருமந்திரம்',

*"பரைபசு பாசத்து நாதனை உள்ளி*
*உரைபசு பாசத்து ஒருங்க வல்லார்க்குத்*
*திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்*
*கரைபசு பாசம் கடந்து எய்தலாமே"*

***(திருமந்திரம், சிறப்புப்பாயிரம், இறைவணக்கம், பா.எண்.49)***

என்னும் பாடலில் வலியுறுத்திக் கூறுகின்றது. பசு, பாசங்களை அகற்றிப் பதியிடம் சேரவேண்டும் என்பதே சைவசித்தாந்தம் வலியுறுத்தும் உட்பொருள் விளக்கமாகும்.

**பதியின் இயல்புகள்**

திருமூலர் பதியாகிய சிவனின் இயல்புகளைச் சைவசித்தாந்த நெறியில் பலவாறாகப் போற்றியுள்ளார். வைதிக சமயங்கள் அனைத்தும் **'கடவுள் உண்டு'** என்னும் கொள்கையை உடையன. 'கடவுள்' என்னும் தனித்தமிழ்ச் சொல்லின் பொருளிலேயே சைவசித்தாந்தக் கருத்துக்கள் அடங்கியுள்ளன. பதியாகிய கடவுளின் இருப்பைச் சித்தாந்திகள் **'சற்காரிய வாதம்'** என்னும் கொள்கையில் விளக்குவர் ('காரியங்கள் பலவும் தோற்றத்திற்கு முன்னர் தத்தம் காரணங்களில் உள்ளனவே' என்பதே சற்காரிய வாதமாகும்). திருமூலர் பதியின் இருப்பையும் அதன் இயல்புகளையும் சிறப்புப் பாயிரத்தில் பன்முகத்தன்மையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

*"சிவனோடுஒக் கும்தெய்வம் தேடினும் இல்லை*
*அவனோடுஒப் பார்இங்கு யாவரும் இல்லை"*

*(திருமந்திரம், சிறப்புப் பாயிரம், பா.எண்.5)*

*"அவனை யொழிய அமரரும் இல்லை*
*அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை"*

*(திருமந்திரம், சிறப்புப் பாயிரம், பா.எண்.6)*

*"தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்*
*தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்"*

*(திருமந்திரம், சிறப்புப் பாயிரம், பா.எண்.10)*

*"ஆதியு மாய்அர னாய்உடல் உள்நின்ற*
*வேதியு மாய்விரிந் தார்ந்துஇருந் தான்"*

*(திருமந்திரம், சிறப்புப் பாயிரம், பா.எண்.15)*

*"இதுபதி ஏலம் கமழ்பொழில் ஏழும்*
*முதுபதி செய்தவன் மூதறி வாளன்*
*விதுபதி செய்வதன் மெய்த்தவம் நோக்கி*
*அதுபதி யாக அமருகின்றானே"*

*(திருமந்திரம், சிறப்புப் பாயிரம், பா.எண்.19)*

*"மண்ணகத்தான் ஒக்கும் வானகத்தான் ஒக்கும்*
*விண்ணகத்தான் ஒக்கும் வேதகத்தான் ஒக்கும்"*

*(திருமந்திரம், சிறப்புப் பாயிரம், பா.எண்.31)*

*"வாழ்த்த வல்லார்மனத்து உள்ளுறை சோதி"*

*(திருமந்திரம், சிறப்புப் பாயிரம், பா.எண்.39)*

*"சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்"*

*(திருமந்திரம், சிறப்புப் பாயிரம், பா.எண்.76)*

சிவனைப் 'பதி' என்ற நிலையில் தேவர்கள் வணங்கும் தேவன், இருளை அழித்த ஒளிச்சோதியன், சிவனின் சிறந்த தெய்வம் இல்லை, சிவனே அனைத்தும், அனைவரும் வழிபடும் இறைவன், விண்ணும் மண்ணும் சிவனே, எங்கும் நிறைந்தவன், கால எல்லையைக் கடந்தவன், சோதிச்சுடர், மனிதனின் உள்ளத்தை உறைவிடமாகக் கொண்டவன், பிறவா இறவாப் பெருமான், அறிவில் உறைபவன், **'சிவம்'** என்ற ஒன்றே பரம்பொருள், திருவடி தொழுவாரைத் தேடி வருபவன், சிவனே வேதியன், மூலமுதல்வன், முக்கண் ஈசன், சதாசிவம் எனப் பலவாறு போற்றியுள்ளார் திருமூலர்.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# சங்கச் செய்திகள்

01.08.2018 அன்று கல்லூரி நாட்டுநலப்பணித் திட்டத்தின் சார்பாக தூய்மை இந்தியா விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் 'சுத்தமே சொர்க்கம்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். சுற்றுப்புறத் தூய்மையின்மை காரணமாக வரக்கூடிய நோய்கள் குறித்தும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைக்க வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார். கல்லூரி மாணவ மாணவியர் 75 பேர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் பா.நேருஜி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

07.08.2018 அன்று முற்பகல் 11 மணியளவில் கவிஞரேறு வாணிதாசன் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளநிலை ஆய்வாளர் செ.திவ்யா அவர்கள் தமது உரையில் "வாணிதாசன் அவர்கள் கவிஞரேறு, தமிழ்நாட்டின் வேர்ட்ஸ்வொர்த், தமிழ்நாட்டுத் தாகூர் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுபவர். பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களுள் ஒருவர். உருசியம், ஆங்கிலம், பிரெஞ்சு எனப் பன்மொழிப் புலமை பெற்றவர். தனது பிரெஞ்சு மொழியாற்றலைப் பயன்படுத்தி "தமிழ் - பிரெஞ்சு கையரக முதலி' என்ற நூலை வெளியிட்டவர். பிரெஞ்சு குடியரசுத் தலைவரிடம் 'செவாலியர்' விருது பெற்ற பெருமைக்குரியவர். 'தமிழச்சி', 'கொடிமுல்லை' ஆகிய சிறு காப்பியங்களையும், 'தொடுவானம்', 'எழிலோவியம்', 'குழந்தை இலக்கியம்' ஆகிய கவிதை நூல்களைப் படைத்தவர். இவருடைய 88 பாடல்கள் அடங்கிய 'வாணிதாசன் கவிதைகள்' என்னும் தொகுப்பு பெரும்புகழ் பெற்ற ஒன்று. முரசொலி, முத்தாரம், மன்றம், தென்றல் உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் கட்டுரை எழுதியவர். இவரது படைப்புகள் உருது, ஆங்கில மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக வாணிதாசன் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

14.08.2018 அன்று பாண்டியன் நூலகத்தில் வாசகர் வட்டம் நடைபெற்றது. இளங்கலை மூன்றாமாண்டு மாணவர் அதிவீரபாண்டியன்

கவிஞர் வாலி அவர்கள் எழுதிய 'பெண்ணின் பெருந்தக்க யாவுள' எனும் நூல் குறித்து திறனாய்வு, மதிப்புரை கருத்துக்களை வழங்கினார். இந்நிகழ்வில் முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியினை நூலகர் தி.பிருந்தா ஒருங்கிணைத்தார்.

23.08.2018 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் சங்க வளாகத்தில் 'அடிப்படை இலக்கணம் கற்போம்' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. திருவையாறு அரசர் கல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் (ப.நி.) முனைவர் ச.திருஞானசம்பந்தம் அவர்கள் தமது கருத்துரையில் இலக்கணத்தை மாணவர்களுக்குப் புரியும் வகையில் எளிய உதாரணங்களுடன் விளக்கிக் கூறினார். முதல்வர் கி.வேணுகா அவர்கள் வரவேற்றார். இந்நிகழ்ச்சியினை முனைவர் அ.நந்தினி ஒருங்கிணைத்தார்.

24.08.2018 அன்று முற்பகல் 11 மணியளவில் நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை முதலாமாண்டு மாணவி சங்கீதா அவர்கள் தமது உரையில் "இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர். தேசியப் போராட்டங்களில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். மகாகவி பாரதியால் பாராட்டப் பெற்றவர். ராஜாஜியின் மனதுக்குகந்த தோழர். உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தின் வழிநடைப் பாடலாக 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' எனும் பாடலை எழுதிப் புகழ் பெற்றவர். இவர் தேசியத்தையும் காந்தியத்தையும் போற்றியவர். முதலில் பால கங்காதர திலகர் போன்றவர்களின் தீவிர கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட இவர் மகாத்மா காந்தியின் கொள்கைகளால் ஆட்கொள்ளப்பட்ட பின் அறப் போராட்டத்தால் மட்டும் விடுதலையைப் பெற முடியும் என்ற முடிவுக்கு வந்தவர். இவரது கவிதைகள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி இருந்ததால் காந்தியக் கவிஞர் எனவும் அழைக்கப்பட்டவர். ஓவியம் வரைவதில் வல்லவர். அவருக்கு 1971ஆம் ஆண்டு 'பத்மபூஷன்' விருது வழங்கப்பட்டது" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

25.08.2018 அன்று முரசொலி அறக்கட்டளை சார்பாக நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கிடையேயான மாவட்ட அளவிலான பாவேந்தர் பாடல் ஒப்புவித்தல் போட்டியில் செந்தமிழ்க் கல்லூரி, இளம் இலக்கியம் முதலாமாண்டு மாணவர் பெ.தெய்வம் முதலிடம் பெற்று ரூபாய் 7000 ரொக்கப் பரிசும், இளங்கலை முதலாமாண்டு மாணவி க.ரேவதி இரண்டாமிடம் பெற்று ரூபாய் 5000 ரொக்கப் பரிசும் பெற்றனர். பாரதிதாசன் பாடல் ஒப்புவித்தல் போட்டியில் முதலாமாண்டு இளம் இலக்கியம் மாணவிகள் பெ.தெய்வம் முதலிடமும் க.ரேவதி இரண்டாமிடமும் பெற்றனர்.

27.08.2018 அன்று முற்பகல் 11 மணியளவில் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை முதலாமாண்டு மாணவி ச.சரண்யா அவர்கள் தமது உரையில் "தெ.பொ.மீ அவர்கள் சமசுகிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, பிரெஞ்சு, செருமன் போன்ற பல மொழிகளை அறிந்த பன்மொழிப்புலவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம், ஒப்பிலக்கியம், மொழியியல் குறித்த பல கட்டுரைகளையும் நூல்களையும் திறனாய்வுகளையும் எழுதியவர். *மதுரை காமராசர்* பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பணியாற்றியவர். தமிழக அரசின் கலைமாமணி விருது, இந்திய அரசின் பத்மபூசன் விருது, தருமபுரி ஆதினத்தின் 'பல்கலைச் செல்வர்' விருது, குன்றக்குடி ஆதீனத்தின் 'பன்மொழிப்புலவர்' விருது பெற்ற பெருமைக்குரியவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

27.08.2018 அன்று முற்பகல் 11 மணியளவில் அ.ச.ஞானசம்பந்தனாரின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளம் இலக்கியம் முதலாமாண்டு மாணவி ப.ரஞ்சிதா அவர்கள் தமது உரையில் "அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் சிறந்த தமிழறிஞரும், இலக்கிய விமர்சகருமாவார். அவருடைய ராவணன் *மாட்சியும் வீழ்ச்சியும், கம்பன் காலை, தம்பியர் இருவர்* ஆகிய நூல்கள் கம்பராமாயணத்தில் அன்னாருடைய செறிந்த அறிவுக்குச் சான்றாகும். ஒரு சைவ சமய அறிஞராகவும், பாடநூல் தயாரிப்பாளர் மற்றும் தமிழ்


விரிவுரையாளராகவும் வாழ்ந்து தனது இறுதி காலம் வரையில் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். சாகித்திய அகாதமி விருது மற்றும் தமிழக அரசின் சங்கப்பலகை குறள்பீடம் விருது பெற்ற பெருமைக்குரியவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக அ.ச.ஞானசம்பந்தனாரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

31.08.2018 அன்று முற்பகல் 11 மணியளவில் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. முதுகலை முதலாமாண்டு மாணவி த.கார்த்திகா அவர்கள் தமது உரையில் "ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் ஆசிரியர், புகழ்பெற்ற தமிழிசைக் கலைஞர், சித்த மருத்துவர் மற்றும் கவிஞர் எனப் பன்முகப் பரிமாணம் கொண்ட ஆளுமையாளர். நாதஸ்வரம், ஆர்மோனியம், வீணை, பிடில் ஆகிய வாத்தியங்களை இசைப்பதில் வல்லவர். சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் இசை குறித்த செய்திகள் இன்றைய கர்னாடக இசையில் மூல இலக்கணங்களாக இருப்பதைப் பண்டிதர் சுட்டிக் காட்டியுள்ளார். தனது பல்லாண்டு கால தமிழிசை ஆராய்ச்சி முடிவுகளை 'கருணாமிர்த சாகரத்திரட்டு' என்ற இசை நூலாகத் தொகுத்து வெளியிட்டவர். இசை, மருத்துவம், இலக்கியம் தவிர புதுப்புது வகைப் பயிர்களை வேளாண்மை செய்வதிலும், காற்றாலைகளை நிறுவி நீர்ப்பாசனம் செய்வதிலும் ஆர்வத்தோடு ஈடுபட்டவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

*"தெள்ளியரு மாகித் திருவு முடையராய்*
*வள்ளுவரும் பொய்ப்பவரு மன்னவராய் - வள்ளலாய்*
*வாழையடி வாழையாய் வந்துதமிழ் காப்பவே*
*ஏழிசையுங் காக்கு மிவர்"*

*(செந்தமிழ்)*


# அக்டோபர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



ம.பொ.சி.
(அக்.3)



செல்வகேசவராய முதலியார்
(அக்.3)



பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்
(அக்.8)




மு.வரதராசனார்
(அக்.10)



வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார்
(அக்.12)



சுந்தரராமசாமி
(அக்.15)



கண்ணதாசன்
(அக்.17)



மு.கதிரேசன் செட்டியார்
(அக்.24)


பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

**ஆசிரியர் குழு**

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

# மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும், கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாக தமிழ்பாடம் மாதிரி தேர்வு சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

நடப்பாண்டு முதல் மாநில பாடத்திட்டத்தில் கூடுதலாக பதினொன்றாம் வகுப்பிற்கும், மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கும் மாதிரி தேர்வு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர்களுக்கு சங்கத்தால் சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பெரும் பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான சங்க தேர்வுகள் மாநில மற்றும் மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கு 19.01.2019-ஆம் நாளன்றும், பதினொன்றாம் வகுப்பிற்கு 05.01.2019-ஆம் நாளன்றும் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு 05.01.2019-ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணவர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1